1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி மற்ற மாநிலங்களைச் சேர்ந்த கைதிகள் இங்கே அனுப்பப்பட்டு, நம்முடைய சிறைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பது. அதைப்பற்றிய பதில்தான் இது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே வங்க தேச கைதிகள் இங்கே வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள், அதற்கான செலவை மத்திய அரசு தந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசினுடைய வேண்டுகோளும், மேற்கு வங்க அரசினுடைய வேண்டுகோளும் ஏற்கப்பட்டு அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதற்கான செலவை அந்தந்த மாநில அரசு தர ஒப்புக்கொண்டுள்ளன.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கள்ள டாலர் அடித்த வெளிநாட்டுக் கைதிகள் நம்முடைய சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். அந்தக் கேசில் சம்பந்தப்பட்டவர்கள் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் இருந்தாரே, அந்த கேஸ் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவரைப்பற்றி இதில் சொல்லப்படவில்லையே, ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை.

Persons arested on Counter-feit charges

* 115 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether anybody was arrested in the Central Jail, Coimbatore on charge of trying to print twenty rupees counterfeit notes in March 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 20 ரூபாய் நோட்டுக்களைக் கள்ளத்தனமாக அச்சிடும் முயற்சியில் பாஸ்கரன் என்ற காவல் கைதிக்கு உதவி செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கோயம்புத்தூர் மத்திய சிறையைச் சேர்ந்த பரமேஸ்வரன், கண்ணப்பன், தாஸ்தகிரி என்ற மூன்று காவலர்கள் கைது செய்யப்

பட்டு அவினாசி கிளைச்சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி காவல் துறையினர் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, கோவை மத்திய சிறைச்சாலையில் இப்படி கள்ளத்தனமான முறையில் 20 ரூபாய் நோட்டு அடிக்கும் முயற்சியிலே சிறைச்சாலையில் வேலை செய்தவர்களே ஈடுபட்டார்கள் என்று அறிகிறேன். அவர்களில் மேலும் பலர் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று தெரிகிறது. ஆகவே, இதை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது புலன் விசாரணை நடந்து வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : அவைத் தலைவரவர்களே, இந்தமாதிரி கள்ள நோட்டு அடிப்பவர்களுக்கு ஏ க்ளாஸ், பி க்ளாஸ் கொடுக்கப்படுகிறதே, அதை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க தமிழக அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கள்ள நோட்டு அச்சடிப்பவர்கள் அல்லது பணக்காரர்கள் என்று சிறையிலே வகுக்கப்படவில்லை. நான் இதைப்பற்றிப் பரிசீலித்தேன். அவர்களுடைய 'டெஃபனிஷன்', சிறைக்கு வருவதற்கு முன்னால் அவர்களுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது என்று பார்க்கிறார்கள், அந்த முறையிலே சிலர் சிறைக்கு வருவதற்கு முன்னால் அவர்களுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறதோ, அதைப் பொறுத்து கொடுக்கப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி : கள்ள நோட்டு அடிப்பது தேசவிரோத, மக்கள் விரோதச் செயலாக இருக்கும் காரணத்தாலும், தண்டனை வழங்கப்பட்டாலும் திரும்பத் திரும்பச் செய்கிற காரணத்தாலும், அது சமுதாயத்தைப் பாதிக்கும் விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும் காரணத்தாலும் இந்தத் தவறு செய்தவர்களைத் தண்டிக்கும்போது ரயில் பாதையை அகற்று

1973 ஆகஸ்ட் 13]

கிறவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்று கூறுவதுபோல் இவர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசு இதுபற்றிப் பரிசீலித்து வருகிறார்கள். அப்போது இப்படிப்பட்ட யோசனை வருமானால் நம்முடைய அரசு ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. முனு ஆதி: கள்ள நோட்டு அடிப்பவர்களின் வாழ்க்கை வசதி உயர்ந்ததாகத்தான் இருக்கும். ஆகவே, நம்முடைய தமிழக அரசு கள்ள நோட்டு அடிப்பவர்களின் வாழ்க்கை வசதி எப்படி இருந்தாலும் அவர்களுக்கு ஏ கிளாஸ் சிறையில் கொடுக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வர முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தக் கள்ள நோட்டு அடித்தவர்களிடமிருந்து என்ன சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? அந்தவகையில் புலன் விசாரணையில் துப்புகள் கிடைத்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரங்களை எல்லாம் இப்போது சொன்னால் அது வழக்கைப் பாதிக்கும்.

திரு. கோவை செழியன்: கள்ள நோட்டு அடிக்கிறவர்கள், கள்ள டாலர் அடிக்கிறவர்கள், வெளிநாட்டுச் சாமான்களைக் கடத்துகிறவர்களை எல்லாம் தமிழ்நாட்டுச் சிறையில் கொண்டு வந்து அடைக்கிறார்கள். அவர்களை எல்லாம் தனிச் சிறையில் போட்டு அடைப்பது நலமாக இருக்கும். இல்லையென்றால் அவர்கள் தொழில் நுட்பத்தைத் தமிழ்நாட்டுக் கைதிகளுக்குச் சொல்லிக் கொடுத்து விடுவார்கள். இது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது ஒரு உண்மையான வாதமாகும். அந்த வகையிலே இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்தவர்களைத் தனியாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.